# தெற்கத்திய கம்பா (Khampa Southern)




**வசிப்பிடம்:** சில ஆராய்ச்சியாளர்களால் அதுஅன்ச(Atuence) என்று அறியப்படும் தெற்கத்திய கம்பாக்களின் இனப் பகுப்பு மற்றும் ஜனத்தொகை பற்றிய விவரங்களில் அநேக குழப்பங்கள் உள்ளன. எங்களுடைய ஆய்வின்படி ஏறக்குறைய 95,000 தெற்கத்திய கம்பா மொழிபேசும் மக்கள் உள்ளனர். கூடவே மியான்மார் தேசத்தின் வடக்கு முனையில் ஒன்பது தெற்கத்திய கம்பாக்களின் கிராமங்கள் உள்ளன.

**அடையாளம்:** தெற்கத்திய கம்பாகளின் மொழி மற்றும் பாரம்பரியங்கள் மற்ற திபெத்தியர்களைக் காட்டிலும் வித்தியாசமானது. சீனாவின் ஓர் அறிஞர் தெற்கத்திய கம்பாக்களின் வாழ்க்கை மற்றும் வழக்கங்கள் சிங்ஹாய் (Qinghai) பீடபூமி திபெத்தியர்களைக் காட்டிலும் வித்தியாசமாக இருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டதைக் குறிப்பிட்டிருக்கிறார். இவர்கள் பாரம்பரியமான திபெத்திய வழக்கங்களோடு சிலவற்றைத் தாங்களாகவே ஏற்படுத்திக்கொண்டுள்ளனர்.

**மொழி:** கடந்த அறுவது வருடங்களாக அநேக மொழியியலாளர்கள் தெற்கத்திய கம்பா மொழியை வெவ்வேறு முறையில் பாகுபடுத்தியுள்ளனர். இம்மொழி மிகவும் பழைமையான நாடோடி திபெத்தியர்கள், மத்திய போதிஷ் மற்றும் மத்திய திபெத்தியர்கள் மொழியென்று விவரிக்கப்படுகிறது. சீனாவின் அதிகாரப்பூர்வ, மொழியை அடிப்படையாகக்கொண்ட வரைபடம், இம்மொழியைத் திபெத்திய மொழியின் தெற்கத்திய கம்பா பிரிவாகக் காட்டுகிறது.

**வரலாறு:** ஆரம்பநாட்களில் திபெத்துடன் இருந்த தேஷின் பகுதி கி.பி. 1703 ல் சீனாவுடன் இணைக்கப்பட்டது, அதிலிருந்து யுன்னான் மாநிலத்தின் ஒரு பகுதியாய் இருந்துவருகிறது. அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பு திபெத்தியர்கள் தெற்காக இடம்பெயர்ந்து இப்பகுதிக்கு வந்துசேர்ந்தனர்.

**பழக்கவழக்கங்கள்:** யுன்னான் மாநிலத்தின் வடக்குப் பகுதியின் முனைக்கோடி கனத்த மழை மற்றும் பனிப்பெய்யும் தனிமைப்படுத்தப்பட்ட மிகவும் உயரமான மலைப்பகுதியாகும். இப்பகுதி முழுவதும் காணப்படும் வெப்ப நீரூற்றுக்கள் குளிர்காலங்களில் உண்டாகும் போராட்டங்களை எதிர்கொள்ள இம்மக்களுக்குப் பேருதவியாய் இருக்கின்றன.

**மதம்:** பெரும்பாலான திபெத்திய தெற்கத்திய கம்பாக்கள் புத்தமதத்தினரானாலும் உலகில் உள்ள திபெத்திய இனங்களின் மத்தியில் அதிகக் கிறிஸ்தவர்கள் உள்ள இனம் இதுவேயாகும்.

**கிறிஸ்துவம்:** சுமார் 600 மக்களையுடைய திபெத்திய எல்லையில் உள்ள மூன்று தெற்கத்திய கம்பா கிராமங்கள் கத்தோலிக்கக் கிராமங்களாகும். இன்னும் 700 கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் யன்ஜிங் என்கிற இடத்திலுள்ள பெரிய சபையில் ஆராதிக்கக் கூடிவருகின்றனர். இப்பகுதியில் முதலில் பாரிஸ் பாரின் மிஷனெரி சொசைட்டி மூலம் கி.பி. 1800 களில் திபெத்தியர்கள் இரட்சிப்புக்குள் நடத்தப்பட்டனர். இந்த மிஷன் எல்லாத் திபெத்திய பகுதிகளையும் அன்போடு சந்திக்கச் சென்றது. கி.பி. 1905 ல் லாமாக்கள் எல்லாப் பிரஞ்சு மிஷனெரிகளையும் கொன்றனர். பாதிரியார் டுபெர்ணர்ட்வின் (Fr. Dubernard) தலை புத்த மடத்தின் முன்பு தொங்கவிடப்பட்டது. சீன அதிகாரிகள் அதற்குப் பதில்கொடுக்க அப்பகுதியிலுள்ள அநேக புத்த மடங்களை இடித்துத்தள்ளினர். அதே நேரத்தில் தலாய் லாமாவினுடைய சீடர்கள் மக்களைப் புத்த மதத்திற்குத் திரும்பும்படி கட்டளை கொடுக்க யன்ஜிங்கிற்கு அருகில் உள்ள கிறிஸ்துவக் கிராமங்களுக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் அநேக கிறிஸ்துவக் குடும்பங்களை ஒரு வயல்வெளியில் சுட்டுக்கொன்றனர். அவ்வயல்வெளி இந்நாள்வரை இரத்தநிலம் எனப்படுகிறது. இந்தக் கொடூரச் செயல் இவர்களை அச்சுறுத்துவதற்கு மாறாக விசுவாசத்தில் ஒருமைப்பட்டுப் புத்த மதத்தை மறுதலிக்க உதவிசெய்தது. அப்பொழுதிலிருந்து இந்நாள்வரைக்கும் இவர்கள் கிறிஸ்தவர்களாகவே வாழ்ந்துவருகின்றனர். அப்பகுதியில் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை பெருகி 1,610 ஆக மாறியது. பெண்டகாஷ்டல் மிஷனெரி யூனியன் கி.பி. 1912 ல் பணியை ஆரம்பித்தது; ஆனால் மிகக்குறைந்த வெற்றியையே கண்டது. அண்மையில் லிசு(Lisu) நற்செய்தியாளர்கள் தெற்கத்திய கம்பாக்கள் மத்தியில் அனுப்பப்பட்டு நூற்றுக்கும் மேலானோரை இரட்சிப்புக்குள் நடத்தியுள்ளனர். திபெத்திய பாதிரியார் லு ரெண்டி (Lu rendi)அவர்களின்படி தென்கிழக்குத் திபெத்தில் 6500 மற்றும் யுன்னான் மாநிலத்தில் அருகாமையிலுள்ளப் பகுதிகளில் மற்றுமொரு 3000 கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் உள்ளனர்.




**Population:**
96,800 (2000)
119,200 (2010)
146,900 (2020)
**Countries:** China, Myanmar
**Buddhism:** Tibetan
**Christians:** 7,500

### மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Deqen Tibetan, Tibetan: Deqen,Atuentse, Atuence, Anshuenkun, Nyarong, Mekong Tibetan, Nganshuenkuan, Deqin Tibetan, Te'ch'in Tibetan, Kangba, Khamba

**மக்கள்தொகை:** 95,750 in China (A.D.2000, P Hattaway); 1,000 in Myanmar in 9 villages (A.D. 2000, P Hattaway)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, வட திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 4 (Derong, Deqen, Gyalthang, Phyagphreng)

**திபெத்திய புத்தமதம்:** 90%

**கிறிஸ்துவம்:** 7.7%

**வேதாகமம்:** சில பகுதிகள் கி.பி.1862, புதிய ஏற்பாடு கி.பி. 1885, திபெத்திய பைபிள் கி.பி.1948

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** Zang:Deging,

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : KHG02

### கிறிஸ்துவத்தின் நிலை

